FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129389

1. District : Thanjavur PS: V+BE, Thanjavur Year: 2026 FIR No.: 05/2026 Date: 02.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention to Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: Sec 7.01 PC Act 1988
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 24.06.2026 12 00 hrs Date to : 30.06.2026 13 01 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: இந்து சைவ அறநிலையத் துறை இணை
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஆணையர் அலுவலகம் தஞ்சாவூர்
8 kms வடக்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. மதியழகன் (b) Father's/ Husband's Name : செல்வராஜ்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 5e/ 2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் - வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 3/15 பிள்ளை வீதி திருக்கண்ணபுரம்
தொழில் ஸ்தபதி முகவரி நாகப்பட்டினம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. தேவராஜ், இணை ஆணையர், இந்து சைவ அறநிலையத் துறை தஞ்சாவூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

\

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

02.7.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

02.07.2026

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

02.07.2026 / 15.45 Hrs

Name: பெயர் இரா. சின்னதுரை
Rank: நிலை DSP.....No. எண் .....
VAO. Thanjavur.

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 05/2026, ச/பி 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) முதல் தகவல் அறிக்கையின் காலம்–12–இன் தொடர்ச்சி

பணிந்து சமர்ப்பிக்கறேன்:– தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளராகிய நான் இன்று 02.07.2026ஆம் தேதி காலை 11.00மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது நாகப்பட்டிணம் மாவட்டம், நாகப்பட்டிணம் வட்டம், திருக்கண்ணபுரம் கிராமம், கீழ வீதி, வீட்டு எண்.3/15 என்ற முகவரியில் வசித்து வரும் செல்வராஜ் என்பவரின் மகன் திரு. செ. மதியழகன் என்பவர் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் S.மதியழகன், த/பெ. A.செல்வராஜ் வீட்டு எண்.3/15, கீழவீதி, திருக்கண்ணபுரம் கிராமம், நாகப்பட்டிணம் தாலுக்கா மற்றும் மாவட்டம். செல் நம்பர் 8098276699 பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர் இலஞ்ச ஒழிப்புத்துறை, தஞ்சாவூர். அய்யா, நான் நாகப்பட்டிணம், திருக்கண்ணப்புரம் கிராமம், கீழவீதி, வீட்டுஎண். 3/15 என்ற முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 38 வருடமாக ஸ்தபதி தொழில் செய்து வருகிறேன். நான் அரசு அங்கீகாரம் பெற்று ஸ்தபதி தொழில் செய்து வருகிறேன். நான் கீழ்வேளூர் அட்சயலிங்க சுவாமி திருக்கோவில், திருவாரூர், துர்காலய ரோடு, காமாட்சி அம்மன்கோவில், நாகப்பட்டிணம் நீலாதாட்சியம்மன் கோவில் ஆகிவற்றில் ஸ்தபதி வேலைகள் செய்துள்ளேன். தற்போது தஞ்சாவூர் வல்லம் ஏகௌரிஅம்மன் கோவிலில் ஸ்தபதி வேலைகள் செய்து வருகிறேன். நாகப்பட்டிணம் மாவட்டம், திருச்செங்காட்டங்குடி கிராமத்தை சேர்ந்த திரு.கணேசன் என்பவர் தமிழ்நாடு இந்து சமய அறநிலைதுறையின் கீழ் வரும் கோவில்களில் புணரமைப்பு மற்றும் திருப்பணி வேலைகளில் ஒப்பந்த அடிப்படையில் டெண்டர் எடுத்து வேலை செய்து வருகிறார். எனக்கு கோவில் சம்மந்தப்பட்ட ஸ்தபதி வேலை தெரியும் என்பதால் நான் கணேசன் எடுக்கும் கோவில் பணிகளை சப்–காண்ட்ராக்ட் எடுத்து செய்து கொடுத்து வருகிறேன். தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம், தீபாம்பாள்புரம் அருள்மிகு வண்மீகநாதன் ஆலய திருப்பணிகளை மேற்சொன்ன கணேசன் அவர்கள் கடந்த 2024 ஆம் வருடத்தில் டெண்டர் எடுத்திருந்தார். அந்த திருப்பணிகளை கணேசன் அவரிடமிருந்து சப்–காண்ட்ராக்டர் என்ற முறையில் நான் எடுத்து செய்து வருகிறேன். தீபாம்பாள்புரம் அருள்மிகு வண்மீகநாதன் ஆலயத்தில் செய்து முடித்த திருப்பணிகளுக்குரிய தொகையை இந்துசமய அறநிலைதுறையை சேர்ந்த AE, ADE மற்றும் EE ஆகியோர் காண்ட்ராக்டர் கணேசன் பெயரில் M–Book எழுதி, அதற்கான பில் தொகையை அவரது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைப்பார்கள். ஒப்பந்ததாரர் கணேசன் அவர்கள் என்னுடைய வங்கி கணக்கில் செலுத்திவிடுவார். தீபாம்பாள்புரம் அருள்மிகு வண்மீகநாதன்

ஆலயத்தில் இதுவரை செய்து முடிக்கப்பட்ட திருப்பணிகளுக்கு மொத்தம் மூன்று பில்கள் போடப்பட்டு, அதற்கான தொகையை காண்ட்ராக்டர் கணேசன் அவர்களது வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டு, அவர் என்னுடைய வங்கி கணக்கிற்கு வரவு வைத்துவிட்டார். இந்த சப்–காண்ட்ராக்டர் எடுத்து பணிகள் செய்வதற்கு கணேசன் அவர்கள் அவரது லெட்டர்பேடில் ஒப்புகை கடிதம் எனக்கு ஏற்கனவே அளித்துள்ளார். தற்போது தீபாம்பாள்புரம் ஆலயத்தில் முடிக்கப்பட்ட பணிகளுக்கு ரூ.23,45,761/– தொகைக்கு நான்காவது பில் போடப்பட்டு, கடந்த ஒரு மாதமாக நிலுவையில் இருந்தது. அந்த பில் சம்மந்தமாக நான் இணை ஆணையர் திருமதி.ஜோதிலெட்சுமி அவர்களை கடந்த 24.06.2026 அன்று பகல் சுமார் 12.00 மணியளவில் பார்த்த போது 6% கமிஷன் தொகை ரூ.1,40,000/– கொடுக்கும்படி சொன்னார். நான் அவரிடம் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொல்லி விட்டு வந்துவிட்டேன். அதன் பின்னர் அந்த பில் சம்மந்தமாக கடந்த 30.06.2026 ஆம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு தீபாம்பாள்புரம் கோவில் செயல் அலுவலர் கலைவாணி மிஸ்டு கால் கொடுத்தார். உடனே நான் எனது செல்போனிலிருந்து அவரிடம் பேசிய போது JC Madam வர சொன்னதாக சொன்னார். அப்போது தஞ்சாவூரிலிருந்து வல்லம் ஏகெளரி அம்மன் கோயிலுக்கு போய் கொண்டிருந்த நான் உடனே புறப்பட்டு JC Madam திருமதி.ஜோதிலெட்சுமி அவர்களை பகல் சுமார் 1.00 மணியளவில் சந்தித்து, தீபாம்பாள்புரம் கோவில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு நான்காவது பில்லை போட்டுதரும்படி கேட்டேன். அதற்கு அவர் ரூ.1,00,000/– மாவது கொடுத்தால்தான் நீங்கள் முடித்த பணிகளுக்கான ரூ.23,45,761/– தொகையை ரிலீஸ் பண்ண முடியும் என்று கறாராக சொன்னார். மேலும் இது சம்மந்தமாக அருகில் இருந்த அவரது நெருங்கிய தோழியான கிரிஜா என்பவரை பார்க்கும்படி சொன்னார். நானும் கிரிஜா அவர்களை பார்த்தப்போது, தீபாம்பாள்புரம் கோவில் செயல் அலுவலர் செக் போட்டு கொடுத்துவிட்டார், நான் மேடத்திடம் அந்த செக்கில் கையெழுத்து வாங்கி வைக்கிறேன், நீங்கள் மேடம் சொன்னப்படி 6 சதவீத கமிஷன் தொகையை கொடுத்துவிட்டு, செக்கை வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் சரிமேடம் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூபாய் ரூ.1,00,000/– கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட JC Madam ஜோதிலெட்சுமி என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் சப்–காண்ட்ராக்டர் பணிகள் செய்ய எனக்கு கணேசன் அவர்கள் வழங்கிய ஒப்புகை கடிதத்தின் நகலை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு SD செ.மதியழகன் 2.7.2026. அய்யா, மேற்சொன்ன புகாரை பெற்று, புகாரின் உண்மைத்தன்மையை உறுதி செய்தும், புகாரின் படி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்: 05/2026 U/s 7 of Prevention of Corruption Act, 1988 (as amended in 2018)–ன்படி 02.07.2026 ஆம்

தேதி 12.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. (ஒப்பம்). இரெ.அன்பரசன், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊ.த.க பிரிவு தஞ்சாவூர். அய்யா, இந்த முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணம் ஆகியவற்றை மாண்புமிகு தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் நகல் ஒன்று அலுவலக கோப்பில் விசாரணைக்கும் வைக்கப்பட்டது.

02.07.2016
(R. ANBARASAN)
DSP, VOAC,
Thanjavur.